Annex I

# உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## (உயர் கல்விப் பிரிவு)

எனது இலக்கம் : HE/EST/02/UTUJC

திகதி : 2016.08.23

தலைவர்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மற்றும் பல்கலைக்கழக கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016**

2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன் மொழிவுகளுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணிகளுக்காக தற்போது அமுல்படுத்தப்படும் சம்பள அளவுத் திட்டங்களுக்குப் பதிலாக இந்தச் சுற்றறிக்கையின் **அட்டவணை I** இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சம்பள அளவுத் திட்டங்களை 2016.01.01 ஆம் திகதி முதல் 05 கட்டங்களில் **அட்டவணை II** குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. அதற்கமைய, ஏற்புடைத்தாகும் சம்பள மாற்றல்களை மேற்கொள்வதற்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக 2016.08.18 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரதி (7 பக்கங்களைக் கொண்டது) , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணிகளுக்கான சம்பள அமைப்பு - 2016 (பக்கம் I முதல் XLIII வரை), சம்பள மாற்றல் முறை மாதிரிகள் என்பவற்றை இணைப்பு I முதல் V வரை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

03. அதற்கமைய, ஏற்புடைத்தாகும் சம்பள மாற்றல்களை மேற்கொள்வதற்கு இத்தால் அங்கீகாரத்தை வழங்குகின்றேன். இது தொடர்பாக மேலதிக அறிவுரைகள் (தெளிவுகள்) தேவைப்படின் மேலே குறிப்பிடப்பட்டள்ள சுற்றறிக்கையின் 19.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**பீ.ஜீ.ஜயசிங்க**
மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)

**ஒப்பம் : டீ.சீ.திசாநாயக்க**
செயலாளர்
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.